DINAMALAR

13 SEP 2021

PAGE 1

# பல்கலையில் சூரிய ஒளி மின் உற்பத்தி

## துணை ஜனாதிபதி இன்று திறப்பு



புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 2.4 மெகாவாட் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டத்திற்காக கட்டடங்களில் பொருத்தப்பட்டுள்ள சூரிய ஒளி மின்சார உற்பத்தி பேனல்கள்.

**புதுச்சேரி, செப். 13–**

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் 2.4 மெகாவாட் சூரிய ஒளி மின் உற்பத்தி திட்டத்தை துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு இன்று திறந்து வைக்கிறார்.

புதுச்சேரி, பல்கலைக்கழகம் கடந்த 1985ல் 780 ஏக்கர் பரப்பளவில் துவக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தில் 15 புலம்கள், 50 துறைகள், சிறப்பு ஆய்வகம், நூலகம், நிர்வாகம், மாணவர்கள் தங்கும் விடுதிகள் உள்ளன.

பல்கலைக்கழக கட்டடங்கள் மின்சார வசதியை நம்பியுள்ளன. மாதத்திற்கு 75 லட்சம் ரூபாய் மின்சார தேவைக்காக பல்கலைக்கழகம் செலவு செய்து வருகிறது.

மின்சார செலவுகளை குறைக்கும் வகையிலும், புதுப்பிக்க வல்ல எரிசக்திக்கு மாறும் வகையில் நிர்வாகம் எல்.இ.டி., விளக்குகள் பல இடங்களில் பொருத்தப்பட்டன.

மத்திய அரசின் உத்தரவின்படி பல்கலைக்கழக கட்டடங்களில் தற்போது 2.4 மெகாவாட் மின்சாரத்தினை உற்பத்தி செய்யும் சூரிய ஒளி மின் உற்பத்தி பேனல்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதனை துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு இன்று துவக்கி வைக்கிறார்.

விழாவில் கவர்னர் தமிழிசை, முதல்வர் ரங்கசாமி, எம்.பி., வைத்திலிங்கம், கோகுலகிருஷ்ணன், தொகுதி எம்.எல்.ஏ., கல்யாணசுந்தரம் கலந்து கொள்கின்றனர்.

இதன் மூலம் பல லட்சம் ரூபாய் பல்கலைக்கழகத்திற்கு மிச்சமாவதுடன், ஆண்டிற்கு 2,900 டன் கார்பன் உமிழ்தலும் தடுக்கப்படும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்த ஆய்வுகள், திட்டங்களை அதிகப்படுத்த வேண்டும்




புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் இன்று நடந்த விழாவில் சூரிய ஒளி மின்உற்பத்தி நிலையத்தை துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு ரிமோட் பொத்தானை அழுத்தி தொடங்கி வைத்தார். அருகில் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன், முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம்.

## துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு பேச்சு

புதுச்சேரி, செப். 13-
புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் உள்ள 15 கட்டிடங்களில் ரூ.15 கோடி செலவில் 2.4 மொகா வாட் கொண்ட சூரியஒளி மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் துவக்க விழா இன்று புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள ஜவகர்லால் நேரு கருத்தரங்க கூடத்தில் நடந்தது. துணைவேந்தர் குர்மீத் சிங் வரவேற்றார். சிறப்பு விருந்தினர்களாக புதுச்சேரி கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன், முதல்வர் ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதன்மை விருந்தினராக துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு கலந்து கொண்டு சூரிய மின் உற்பத்தி நிலையத்தை துவக்கி வைத்து பேசியதாவது:

உலகின் வெப்பநிலை அடுத்த சில ஆண்டுகளில் 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என்று பருவநிலை மாற்றத்துக்கான பன்னாட்டு அரசுக்குழு எச்சரித்துள்ளது. இதனால் அடுத்த சில ஆண்டுகள் பருவநிலை மாற்றத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு மாற்றாக புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி, சோலார் பேனல் பொருத்துவது போன்றவற்றில் அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். அனைத்து அரசு கட்டிடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் சூரியஒளி மின் உற்பத்தியை ஊக்கப்படுத்த வேண்டும். சூரிய ஒளி மின் உற்பத்திக்கான மின் சாதனங்கள் வெளிநாடுகளில் இருந்து அதிகம் இறக்குமதி செய்யப்படுகிறது. தற்போது ஆத்ம நிர்பார் பாரத் திட்டத்தின் கீழ் இவை தயாரிக்கப்படுகிறது.

மேலும், சோலாரின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டால், அவற்றின் தேவை அதிகரிக்கும். எனவே, சோலார் பேனல் தயாரிப்பு பணிகள் குறித்து பொறியியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். பல்கலைக்கழகங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்த ஆய்வுகளையும், திட்டங்களையும் அதிகப்படுத்த வேண்டும். அதேபோல், புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகளில் ஈடுபட மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இவ்விழாவில் சபாநாயகர் செல்வம், கல்யாணசுந்தரம் எம்எல்ஏ மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் முதல்வர் ரங்கசாமி பேசுகையில், 'புதுவையில் மின் தேவை அதிகரித்துள்ளது. இந்நிலையில் புதுவை பல்கலைக்கழத்தில் 2.4 மெகா வாட் மின்சாரமும், ஜிப்மரில் 1.5 மெகா வாட் மின்சாரமும் சூரிய ஒளி மூலம் உற்பத்தி செய்வது பாராட்டுக்குரியதாகும். இது மக்களுக்கு ஒரு எடுத்துக்கட்டு ஆகும். இதேபோல் அரசு கட்டிடங்களிலும், வீடுகளிலும் சோலார் பேனல்கள் பொருத்தி சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தியை பெருக்குவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்' என்றார்.

இவ்விழா முடிந்ததும் லாஸ்பேட்டையில் உள்ள விமான நிலையத்துக்கு காரில் சென்ற துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, அங்கிருந்து தனி ஹெலிகாப்டர் மூலம் சென்னை புறப்பட்டு சென்றார்.

MAALAI MALAR

13 SEP 2021.

PAGE 6

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# சூரியஒளி மின்சக்தி திட்டம்

## துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, செப்.13-

புதுவை பல்கலைக்கழகம் 1985-ல் 780 ஏக்கரில் தொடங்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தில் 15 புலம்கள், 50 துறைகள், சிறப்பு ஆய்வகம், நிர்வாக அலுவலகம், மாணவர்கள் தங்கும் விடுதிகள் உள்ளன. பல்கலைக்கழக கட்டடங்கள் அனைத்தும் மின் வசதியை நம்பியே இருந்தன. இதனால் மாதத்துக்கு ரூ.75 லட்சம் மின்தேவைக்கு பல்கலைக்கழகம் செலவு செய்து வந்தது. மின்சார செலவுகளை குறைக்கும் வகையிலும், புதுப்பிக்கவல்ல எரிசக்திக்கு மாறும் வகையிலும் நிர்வாகம் எல்.இ.டி. விளக்குளை பொருத்தியுள்ளன.

**சூரிய ஒளி மின் உற்பத்தி பேனல்கள்**

மத்திய அரசு உத்தரவின் படி பல்கலைக்கழக கட்டடங்களில் இப்போது 2.4 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் சூரிய ஒளி மின் உற்பத்தி பேனல்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் தொடக்கவிழா இன்று நடந்தது.

**துணை ஜனாதிபதி தொடங்கி வைத்தார்**

விழாவில் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத்சிங் வரவேற்றார். சூரிய ஒளி மின் திட்டத்தை துணைஜனாதிபதி வெங்கய்யா நாயு இன்று தொடங்கி வைத்தார். விழாவில் கவர்னர் தமிழிசை, முதல்-அமைச்சர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், எம்.எல்.ஏ. கல்யாணசுந்தரம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த திட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்துக்கு பல லட்சம் நிதி மிச்சமாவதுடன், ஆண்டுக்கு 2 ஆயிரத்து 900 டன் கார்பன் உமிழ்தல் தடுக்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.